**த. நா.ச.பே. எண் : 009** **நாள் : 24.03.2020**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி **110**–ன்கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 24.3.2020

## தொழில் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

தொழில் வளர்ச்சியில், தமிழ்நாடு மேலும் மேன்மை அடையும் வகையில், பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. சிப்காட் சிறுசேரி, நாவலூர் ஏரியினை தூர்வாரி ஆழப்படுத்துவதுடன், கரையினை உறுதிப்படுத்தி, நடைபாதை வசதி, சைக்கிள் பாதை வசதிகளுடன் **பூந்தோட்டத்துடனான இயற்கை பூங்கா 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.** இதன் மூலம் சிப்காட் சிறுசேரி தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் பணிபுரியும் பணியாளர்களும் மற்றும் பொது மக்களும் பயனடைவர்.

2. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் சிப்காட் தொழிற்பூங்காவில் உள்ள தொழிற்சாலைகளுக்கு தங்கு தடையின்றி தண்ணீர் வழங்கும் பொருட்டு, கெலவரப்பள்ளி அணைக்கட்டிலிருந்து நீரைப் பெற்று, அந்நீரை சுத்திகரித்து ஓசூர் சிப்காட் தொழிற் பூங்காவில் உள்ள சுமார் 355 தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கப்படும். இதற்கென நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட **மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம், 110 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

3. தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீட்டை ஈர்க்கும் வகையில், **சென்னைக்கு அருகாமையில் சிப்காட் மாநல்லூர் தொழிற்பூங்காவில் மின்சார வாகனப் பூங்கா ஒன்று 148 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.** இத்தொழிற்பூங்கா அனைத்து அடிப்படை வசதிகளுடனும், மின்சார வாகன

உற்பத்திக்குத் தேவையான தொழில் நுட்ப ஆய்வு மையம், சோதனை மையம், கிடங்கு வசதி மற்றும் கனரக வாகனங்கள் நிறுத்தும் வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமையும்.

4. சிப்காட் நிறுவனம் புதிதாக அமைக்கவுள்ள மாநல்லூர், செய்யாறு, மணப்பாறை, தேனி, மணக்குடி மற்றும் சக்கரக்கோட்டை ஆகிய தொழிற் பூங்காக்களில் ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் வேளாண்மை ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (NABARD) நிதி உதவியுடன் 2,934 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நவீன உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

5. வணிகம் மற்றும் நிறுவன தகவல்களை சேமித்தல், மீட்டெடுத்தல், தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகளை செயல்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் தொழில் நிறுவனங்கள் அமையும் வகையில், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ள நெமிலி மற்றும் மன்னூர் கிராமங்களில் சுமார் 150 ஏக்கர் நிலப்பரப்பில், **500 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், தரவு மைய பூங்கா ஒன்றினை டிட்கோ உருவாக்கும்.** இப்பூங்காவில் செயல்பாட்டுக்கு வரும் தொழில் நிறுவனங்கள் மூலம் சுமார் 3,500 புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும். நவீனயுகத்தின் பெரும் சொத்தாகக் கருதப்படும் தகவல் தரவுகளுக்கான தொழில் பூங்கா தமிழ்நாட்டில் அமைக்கப்படுவதன் மூலம், தகவல் தொழில்நுட்ப துறையில் தமிழ்நாடு மேலும் முன்னேற்றம் அடைந்திடும் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மூலம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படவிருக்கும் அறிவிப்புகளை இப்பேரவையில் வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

1. புத்தாக்கங்கள் மற்றும் அறிவுசார் நிறுவனங்களின் (Innovation and Knowledge based firms) செயல்பாடுகளை ஆதரித்து, புத்தொழில்கள் உருவாக்கும் நோக்கத்துடன், உட்கட்டமைப்பு சேவைகள் மற்றும் வணிகச் சூழலுடன் கூடிய ஒரு புத்தொழில் மற்றும் புத்தாக்க நகரம் **(Startup and Innovation City)** சென்னையில் 350 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

2. தமிழ்நாடு அரசின் பங்களிப்புடன் தனியார் தொழிற் பூங்கா உருவாக்கும் திட்டத்தின் கீழ், கோயம்புத்தூர் மாவட்டம், சூளூர் வட்டம், கல்லப்பாளையம் கிராமத்தில் 116.24 ஏக்கர் பரப்பளவில், 20 கோடியே 96 லட்சம் ரூபாய் மதிப்பில், கொடிசியா மூலம் ஒரு புதிய தனியார் தொழிற்பூங்கா அமைக்கப்படும். இத்திட்டத்திற்கு அரசின் மானியமாக 10 கோடி ரூபாய் வழங்கப்படும்

3. தமிழ்நாடு மின்சார வாகன கொள்கை – 2019-ன் அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாட்டில் மின்சார வாகன உபகரணங்கள் உற்பத்தி செய்யும் மற்றும் மின்சாரம் ஏற்றும் கட்டமைப்புக்கு தேவையான உபகரணங்களை உற்பத்தி செய்ய தொடங்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், அதிகபட்சமாக 50 லட்சம் ரூபாய் வரை, 25 சதவீதம் சிறப்பு மூலதன மானியமும், அதிகபட்சமாக 10 லட்சம் ரூபாய் வரை, தகுதி வாய்ந்த இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 20 சதவீதம் வரை, கூடுதல் சிறப்பு மூலதன மானியமும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பால் வளத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

பால் வளத் துறையின் மூலம் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:-

1. பால் உற்பத்தி திறன் அடிப்படையின் மூலம் பிறந்த கிடாரிகளின் வம்சாவழி சோதனை திட்டத்தின் மூலம் **20.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 180 உயர்ரக பொலி காளைகள் உற்பத்தி செய்யப்படும்.**
2. பால் உற்பத்தியாளர்களின் **கால்நடைகளுக்கு தரமான பசுந்தீவனம் அளிக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, 25 ஆயிரம் ஏக்கர் அளவிற்கு விவசாயிகளின் பட்டா நிலங்கள் கண்டறியப்பட்டு,** அதில் **பசுந்தீவன புல் பயிரிட** மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் மூலம் **37.50 கோடி ரூபாய் மானியத்தில் வேளாண் உள்ளீடுகள் வழங்கப்பப்படும்.** மேலும், அந்நிலங்களில் **50 கோடி ரூபாய் மானியத்தில் 'பிரதம மந்திரி கிரிஷி சின்ஜாயி யோஜனா' திட்டத்தின் கீழ் நுண்ணீர் பாசன வசதிகள் செய்து தரப்படும்.**
3. **தூத்துக்குடி மாவட்டத்தில்** நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் பால் கையாளும் திறன் மற்றும் **மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிக்கும் வசதியுடன் கூடிய புதிய பால் பண்ணை, 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.**
4. **தேனி மாவட்டத்தில்** நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிக்கும் வசதியுடன் கூடிய **புதிய பால் பண்ணை 58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.**
5. அதிகரித்து வரும் தயிர், மோர், லஸ்ஸி, பன்னீர் போன்ற பால் உப பொருட்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், திருவண்ணாமலை, மாதவரம், சோழிங்கநல்லூர் மற்றும் அம்பத்தூரில் உள்ள பால் பண்ணைகளில் **பால் உபபொருட்கள் தயாரிப்பதற்குத் தேவையான உபகரணங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை மேம்படுத்த 119.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும்** என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

நடப்பாண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறையில் செயல்படுத்தப்பட இருக்கும் புதிய திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

1) பொது மக்களுக்கு அவசர காலங்களில் உயிர் காப்பதில் சிறப்பாக சேவை செய்து வரும் 108 அவசர கால ஆம்புலன்ஸ் சேவையை மேலும் வலுப்படுத்துவதற்காக, நடப்பாண்டில் 500 புதிய அவசர கால ஊர்திகள் 125 கோடி ரூபாய் செலவில் வாங்கி, வழங்கப்படும்.

2) கிராமப்புற வளரிளம் பெண்களுக்கிடையே தன் சுத்தத்தை ஊக்குவிக்க மாதவிடாய் கால தன் சுகாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டம் 37.47 கோடி ரூபாய் செலவில் நகர்ப்புறத்தில் பயிலும் பள்ளி மாணவியர்களுக்கும் விரிவுபடுத்தப்படும். மேலும் அனைத்து அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளியாக சிகிச்சை பெறும் பெண்களுக்கும் சானிடரி நாப்கின் வழங்கப்படும்.

3) சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில், கடினமான அறுவை சிகிச்சைகளை துல்லியமாகவும், விரைவாகவும், உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிறப்பான சிகிச்சை அளிக்க நவீன Robotic அறுவை சிகிச்சை மையம் 34.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

4) புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள ராணிப்பேட்டை வருவாய் மாவட்டத்திற்கு, புதிய சுகாதார மாவட்டம் 3 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

## <u>இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை</u>

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:-

1. **தொன்மை வாய்ந்த 55 திருக்கோயில்களில்** அதன் தொன்மை மாறாமல் பாதுகாத்திட, 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு மற்றும் திருக்கோயில் நிதியிலிருந்து **திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.**
2. திருக்கோயில்களுக்கு சொந்தமான 100 **திருக்குளங்கள்** 26.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு மற்றும் திருக்கோயில் நிதியிலிருந்து **தூர் வாரி, படித்துறை மற்றும் தடுப்புச் சுவர் கட்டப்பட்டு, திருப்பணி மேற்கொள்ளப்படும்.**
3. நிதி வசதி மிக்க 50 திருக்கோயில்களில் 4 கோடி ரூபாய் செலவில் ஏழை, எளிய மற்றும் நலிவடைந்த **10,000 இணைகளுக்கு இலவச திருமணங்கள்** நடத்தி வைக்கப்படும்.
4. 8.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **'திருக்கோயில்'** என்ற பெயரில் **தொலைக்காட்சி தொடங்கப்படும்.**
5. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழ் இல்லாத **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் அமைந்துள்ள 1000 திருக்கோயில்களில், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.**
6. இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழ் உள்ள **1000 கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணிக்காக 10 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.**
7. **திருத்தணி** அருள்மிகு சுப்பிரமணியசுவாமி **திருக்கோயிலில்** 8.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய **மலைப்பாதை அமைக்கப்படும்.**
8. **மருதமலை,** அருள்மிகு சுப்பிரமணியசுவாமி **திருக்கோயிலுக்கு** 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **மின் தூக்கி அமைக்கப்படும்.**
9. **திருவிடந்தை** அருள்மிகு நித்திய கல்யாணப் பெருமாள் திருக்**கோயிலில்** 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **புதிய திருமண மண்டபம் கட்டப்படும்.**

10. **திருநெல்வேலி** மாவட்டம், பாளையங்கோட்டை, சேலம், வேலூர் ஆகிய இடங்களில் **ஒருங்கிணைந்த மண்டல அலுவலகங்கள், 9** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **புதியதாக கட்டப்படும்.**
11. **ஒரு கால பூஜை, 214 திருக்கோயில்களுக்கு** 2.14 கோடி ரூபாய் மதிப்பீடில் **விரிவுபடுத்தப்படும்.**
12. **31.7.2019 வரை 5 ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்து** பணி நிறைவு செய்த **சுமார் 2000 தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய பணியாளர்களின் பணியினை** தகுதியின் அடிப்படையிலும் காலிப்பணியிடங்களை கணக்கில் கொண்டும் **காலமுறை ஊதியம் வழங்கி பணி நிரந்தரம் செய்யப்படும்.**
13. திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற நிரந்தரப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் துறை நிலையிலான **ஓய்வூதியம் 2000 ரூபாயிலிருந்து 3000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**
14. 9 முதுநிலை திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு 16.43 கோடி ரூபாய் செலவில் **நாள் முழுவதும் பிரசாதம் வழங்கப்படும்.**
15. அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி மற்றும் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் பக்தர்களின் வசதிக்காக **176.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் கூடிய பெருந்திட்டம் தயாரிக்கப்படும்.** முதற்கட்டமாக 80.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.
16. புதியதாக **9.05** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **9 இணை** ஆணையர் **அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு,** 19 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.
17. புதியதாக 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **8 உதவி ஆணையர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டு,** 17 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

18. **திருக்**கோயில்களில் 3.64 கோடி ரூபாய் மதிப்பீட்டில், **நகை சரிபார்ப்பு பிரிவில் 50 கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும்.** மேலும், 4 பணியிடங்கள் நிலை உயர்த்தப்படும்.

19. **திருக்கோயில்களில் புதியதாக 117 ஆய்வர்** பணியிடங்**கள் மற்றும் 117 அலுவலக உதவியாளர் பணியிடங்கள்** 12.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தோற்றுவிக்கப்படும்.

20. திருக்கோயில்களின் ஆண்டு வருவாயின் அடிப்படையில் 14.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **கூடுதல் ஆணையர் முதல் செயல் அலுவலர் நிலை–4 வரை 205 பணியிடங்கள் ஏற்படுத்தப்படும்.**

21. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களில் **20 ஆண்டுகள் பணிபுரிந்து, 60 வயதை கடந்து ஓய்வு பெற்ற கிராம கோயில் பூசாரிகள் ஓய்வூதியத்தை 1000 ரூபாயிலிருந்து 3000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.** மேலும், ஓய்வூதியம் பெறுவதற்கான உச்ச வரம்பு 24,000 ரூபாயிலிருந்து 72,000 ரூபாயாக உயர்த்தப்படும். இதற்கான கூடுதல் செலவினம் 4.64 கோடி ரூபாய் அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

22. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சட்டப்பிரிவு 46(iii)ன் கீழ் ஆண்டு வருமானம் 10 லட்சம் ரூபாய்க்கும் மேல் உள்ள **331 திருக்கோயில்களில் தூய்மை மேம்படுத்தப்படும்.** முதற்கட்டமாக நடப்பு ஆண்டில் 100 திருக்கோயில்களில் தூய்மை குறித்தான நிலையான இயக்க நடைமுறையை (Standard Operating Procedure) பின்பற்றி திட்டம் தயாரித்து நடைமுறைப்படுத்தப்படும்.

23. இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சட்டப்பிரிவு 46(iii)ன் கீழ் ஆண்டு வருமானம் ரூ.10 லட்சத்திற்கும் மேல் உள்ள **331 திருக்கோயில்களில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்கள் எளிதாக தரிசனம் செய்வதற்கு வசதிகள் செய்து தரப்படும்.** முதற்கட்டமாக 100

திருக்கோயில்களில் நிலையான இயக்க நடைமுறையை பின்பற்றி திட்டம் தயாரித்து செயல்படுத்தப்படும்.

## வேளாண்மைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

வேளாண் பெருமக்களின் நலனுக்காகவும், வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:-

1. தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் பரப்பளவை அதிகரிக்கும் நோக்கத்தில், **25,000 ஏக்கர் தரிசு நிலங்களை கண்டறிந்து, சாகுபடிக்கு ஏற்றதாக அந்நிலங்களை சீர்திருத்தி, உழவுப் பணி மேற்கொண்டு,** வறட்சி தாங்கி வளரும் பயிர் சாகுபடிக்கு தேவையான இடுபொருட்கள் வழங்க, **10.40 கோடி ரூபாய் வழங்கப்படும்.**
2. காவேரி டெல்டா மாவட்டங்களில் 44ம், மற்ற மாவட்டங்களில் 81ம் என மொத்தம் **125 துணை வேளாண் விரிவாக்க மையங்கள், 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் கட்டப்படும்.**
3. நடப்பாண்டில் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, தர்மபுரி, திருப்பூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், தேனி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய **10 மாவட்டங்களில் உள்ள திட உயிர் உர உற்பத்தி மையங்கள், 12.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உபகரணங்கள் வாங்கி, திரவ உயிர் உர உற்பத்தி மையங்களாக மாற்றப்படும்.**
4. பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் உள்ள கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு தரமான சான்று பெற்ற விதைகளை வழங்க, **புதிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து தரவும், ஏற்கனவே உள்ள 2 விதை சுத்திகரிப்பு நிலையங்களின் தரத்தை உயர்த்தி நவீனப்படுத்தவும், நடப்பாண்டில் 3 கோடியே 91 லட்சம் ரூபாய் நிதி வழங்கப்படும்.**

5. நெல் ரகங்களின் பாதுகாவலர் மறைந்த திரு. நெல் ஜெயராமன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில், 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ‘‘**பாரம்பரிய நெல் பாதுகாப்பு மையம்**’’ அமைக்கப்படும்.

6. தமிழ்நாட்டில் காய்கறி மற்றும் பழங்கள் அதிகம் சாகுபடி செய்யப்படும் **250 வட்டாரங்களில்**, நடப்பாண்டில் **40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாற்றங்கால் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.**

7. **தோட்டக்கலைப் பயிர்களை** சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளை **ஊக்குவிப்பதற்காக நடப்பாண்டில் 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.**

8. பசுமைக்குடில் சாகுபடி, நிழல்வலை குடில் சாகுபடி, பந்தல் சாகுபடி, நிலப்போர்வை மற்றும் சொட்டு நீர் பாசனம் உள்ளிட்ட நவீன தோட்டக்கலை தொழில் நுட்பங்களை டெல்டா மாவட்ட விவசாயிகளிடையே அறிமுகப்படுத்தி, வருமானத்தை உயர்த்திட, காவேரி டெல்டா மாவட்டங்களில் **7,500 ஏக்கர் பரப்பளவில் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படும்.**

9. தஞ்சாவூர் மாவட்டம், **கும்பகோணத்தில் வெற்றிலை பயிருக்கான சிறப்பு மையம் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

10. நடப்பு ஆண்டில், **இயற்கைப் பண்ணைய முறையில்** கீரை வகைகள், தக்காளி, கத்திரி, வெண்டை, முட்டைகோஸ் மற்றும் காலிப்ளவர் போன்ற **காய்கறிப் பயிர்களை சாகுபடி செய்யும் முறையினை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தி ஊக்குவிக்க, 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.**

11. விவசாயிகளின் விளை பொருட்களுக்கு சரியான விலை கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், திருவாரூர் மாவட்டம், மூங்கில்குடி கிராமத்தில் நன்னிலம் அரசு விதைப் பண்ணையில், **10**

**ஏக்கர் பரப்பளவில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரிசி சார்ந்த உணவு பதப்படுத்தும் தொகுப்பு அமைக்கப்படும்.**

12. உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தங்களுடைய தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கான நவீன சந்தை வசதிகளும், இடுபொருட்கள் விற்பனை மையமும், பல்உணவு முற்றம், சிப்பம் கட்டும் அறை, குளிர்பதன கிடங்கு, வணிகத் தொடர்பு மையங்கள் ஆகியவை கொண்ட ஒருங்கிணைந்த வேளாண் வணிக மாதிரி அங்காடிகள், **தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், சிதம்பரம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் தலா 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

13. மின்னணு வர்த்தகத்தின் பயன்களை விவசாயிகள் பெறுவதற்கும், அவர்களின் விளைபொருட்களை தேசிய அளவில் வர்த்தகம் செய்ய உகந்த சூழ்நிலையை தமிழ்நாட்டில் உருவாக்கவும், 50 கோடி ரூபாய் செலவில் 100 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில், மின்னணு வர்த்தக தளம் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**14.** இது வரை தமிழ்நாட்டில் 165 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. 2020–2021ஆம் ஆண்டில் மேலும் **100 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்க மாநில அரசு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கும்.**

15. தூத்துக்குடி மாவட்டம் புதூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையத்தில், சிவப்பு மிளகாய் அரவை செய்து சிப்பம் கட்டுதல், கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி முதன்மைப் பதப்படுத்தும் நிலையத்தில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் இயந்திரம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர், தருமபுரி மாவட்டம் பாலக்கோடு, நீலகிரி மாவட்டம் அனிக்கோரை மற்றும் சுள்ளிக்கூடு ஆகிய முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களில் காய்கறிகளுக்கு மதிப்புக் கூட்டும் இயந்திரம், கோயம்புத்தூர் மாவட்டம் வடக்கிப்பாளையம் மற்றும் பிச்சனூர் முதன்மைப் பதப்படுத்தும்

நிலையங்களில், பல்வகை காய்கறி மற்றும் பழங்களை ஆழ்நிலை உறைய வைத்தல் மற்றும் உலர்வித்தல் இயந்திரங்கள், திண்டுக்கல் மாவட்டம் கோபால்பட்டி மற்றும் தருமபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி ஆகிய முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்களில் புளிக்கூழ் மற்றும் புளி விதைப் பசை தயாரிக்கும் இயந்திரம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மண்ணச்சநல்லூர் முதன்மைப் பதப்படுத்தும் நிலையத்தில் வெங்காயம் பதப்படுத்தும் இயந்திரம், போன்ற **இரண்டாம் நிலை பதப்படுத்தும் இயந்திரங்கள், 15 கோடி ரூபாய் மதிப்பில் நிறுவப்படும்.**

16. காவேரி டெல்டா பகுதிகளில் உள்ள வேளாண் பெருமக்களுக்கு தேவையான அதிக சக்தி கொண்ட 20 டிராக்டர்கள், டிராக்டரால் இயங்கக்கூடிய 10 நிலம் சமன் செய்யும் கருவிகள், 10 ரோட்டா பட்லர் என்ற சேறு கலக்கும் கருவிகள், 51 வைக்கோல் கூட்டும் கருவிகள், 5 நெல் தானிய உலர்த்திகள் மற்றும் 10 ஹேரேக் நெல் **அறுவடை இயந்திரங்கள்** ஆகியவை **7 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்பட்டு**, **விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்கப்படும்.** மேலும், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் 20 வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்களை அமைத்திட 2 கோடி ரூபாயும், கரும்பு அறுவடைக்கேற்ற 2 இயந்திர வாடகை மையங்கள் அமைத்திட ஒரு கோடியே 20 லட்சம் ரூபாயும், அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை இயந்திரங்களை விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை பண்ணை அளவிலேயே மதிப்புக்கூட்டும் வகையில், 50 இயந்திரங்களுக்கு 75 லட்ச ரூபாயும், பாசனத்திற்கான மின் தேவையினை பூர்த்தி செய்திடும் வகையில் சூரிய சக்தியால் இயங்கும் 1,000 பம்பு செட்டுகளை விவசாயிகளின் நிலங்களில் நிறுவிட 23 கோடியே 70 லட்சம் ரூபாய், என மொத்தம் 35 கோடியே 11 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேளாண்

பொறியியல் சேவைகள் காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

17. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் **50**ஆவது ஆண்டு நிறைவடைந்த சிறப்பைப் போற்றிடும் வகையில், பழமையான கட்டடங்களை புதுப்பிக்கவும், நினைவு மண்டபம் கட்டவும், விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் கருத்துக் காட்சிகளும், கருத்தரங்குகளும் நடத்துவதற்காக **மாண்புமிகு அம்மாவின் அரசு 29 கோடியே 86 லட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கும்.**

18. பல்வேறு நாடுகள் பின்பற்றி வரும் தொழில் நுட்பங்களை நமது விவசாயிகள் காணவும், அவற்றை கடைபிடிக்கவும் ஏதுவாக, வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்ல, **4** கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

19. வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் உயர் மகசூல் பெறும் பொருட்டு, புதிய பயிர் ரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்களின் ஆராய்ச்சிப் பணியை வலுப்படுத்தும் வகையில், **நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், வடுவாஞ்சேரி கிராமத்தில், புதிய வேளாண் ஆராய்ச்சி நிலையம் ஒன்று 200 ஏக்கர் பரப்பளவில்** தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் உருவாக்கப்படும். இதற்காக நடப்பாண்டில் **15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தகவல் தொழில்நுட்பவியல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

இந்தியாவின் வன்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில், **30** விழுக்காடு பங்களிப்பை அளித்து நாட்டின் வன்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. சுமார் **12** ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை இத்துறையின் மூலம் தமிழ்நாடு செய்துள்ளதாக, இந்திய மின்னணு

தொழிற்சாலைகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. மேலும், இத்துறை சுமார் 40 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்கி வருகிறது. தகவல் தொழில்நுட்பத் துறைக்கு மிகுந்த முன்னுரிமை அளித்து பின்வரும் அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்:-

1. உலகெங்கும் உள்ள மின்னணு உற்பத்தித் தொழில்களின் முதலீட்டை தமிழ்நாட்டில் ஈர்க்கும் விதமாக, 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன், 4 இடங்களில், மின்னணு உற்பத்தி தொகுப்பு மண்டலங்களை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அமைக்கும்.
2. பொது மக்கள் இணைய வழியில் பாதுகாப்பான பணப் பரிமாற்றம் செய்யவும், பல்வேறு தரப்பிலிருந்து தொடுக்கப்படும் இணைய வழி தாக்குதல்களை எதிர்கொள்ளவும், பொது மற்றும் தனியார் தரவு உட்கட்டமைப்புகளை பாதுகாத்திடவும் வழிவகை செய்யும் "**இணைய பாதுகாப்புக் கொள்கை**" வெளியிடப்படும்.

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:-

1. தமிழ்நாட்டின் 13 முக்கிய அரசுத் துறைகளின் துறைத் தலைவர் அலுவலகங்கள் சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள '**எழிலகம்**' வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பழமையான கட்டடத்தின் பராமரிப்புச் செலவு மிக அதிக அளவில் ஏற்படுகிறது. எனவே, அதே இடத்தில் **120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும். இக்கட்டடம் அருகில் உள்ள பாரம்பரிய கட்டடங்களுக்கு நிகராக கட்டப்படும்.**

2. கடந்த ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட **சங்கரன்கோயில், குடியாத்தம், ஸ்ரீபெரும்புதூர், வாணியம்பாடி மற்றும் அரக்கோணம் ஆகிய 5 கோட்டங்களுக்கு 16.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் கட்டப்படும்.** அதே போன்று, **திருவெண்ணைநல்லூர், கல்வராயன்மலை, கலவை, கே.வி.குப்பம், குன்றத்தூர், வண்டலூர், மற்றும் சோளிங்கர் ஆகிய 7 வட்டங்களுக்கு 28.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் கட்டப்படும்.**

3. பழுதடைந்த வருவாய்த் துறை கட்டடங்களுக்கு மாற்றாக புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும் என்ற அடிப்படையில், **சென்னை வடக்கு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, செங்கல்பட்டு மற்றும் சேலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள், 8.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டித் தரப்படும்.** அதே போல, கள்ளக்குறிச்சி, ஆற்காடு, வாலாஜா, விளாத்திகுளம், திருச்செந்தூர், சாத்தான்குளம், பொன்னேரி, நன்னிலம், மன்னார்குடி மற்றும் குடியாத்தம் ஆகிய **10 வட்டாட்சியர் அலுவலகங்கள், 37.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்.** மேலும், கறம்பக்குடி, பொன்னமராவதி, ராமேஸ்வரம், முதுகுளத்தூர், வாலாஜா, மேட்டூர், சேலம் (மேற்கு), தூத்துக்குடி, ஆம்பூர், திருவாரூர், நன்னிலம், மன்னார்குடி, திருவெறும்பூர் மற்றும் மணப்பாறை ஆகிய **14 வருவாய் வட்டாட்சியர்களுக்கு, 4.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடியிருப்புகள் கட்டித் தரப்படும்.** இது தவிர **180 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள், 39.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டித் தரப்படும்.**

4. **11.7.2017 அன்று இதே சட்டப் பேரவையில் நான் அறிவித்தபடி,** பேரிடர்களின் போது மீட்பு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள தனியாக **பேரிடர் மீட்புப் படை ஒன்று உருவாக்கப்பட்டு, அவர்களுக்கு பயிற்சி அளித்து, உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை மேம்படுத்த,**

**உலகத் தரம் வாய்ந்த உபகரணங்களை கொள்முதல் செய்ய 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

5. சாதாரண மக்களும் எளிதாக கையாளும் வகையில், இணைய வழியாக நிலம் சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களும் கிடைக்க வகை செய்ய "**தமிழ் நிலம்**" என்ற ஒரு மென்பொருள் உருவாக்கி, அனைத்து துறைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, நில ஆவணங்களை புதுப்பித்தல், இணைய வழியாக சொத்து தொடர்பான வில்லங்க விவரங்கள் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்படும்.

6. நவீன நில அளவை கருவிகளான பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவை கருவிகள் கொண்டு முன்னோடியாக கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நிலஅளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முறையை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த உத்தேசித்துள்ள நிலையில், **முதற்கட்டமாக 40.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் நவீன நில அளவை கருவிகளைக் கொண்டு நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்படும்** என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:-

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள் நலனை கருத்தில் கொண்டு, **6 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 5 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 17 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், 48.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலை உயர்த்தப்படும்.**

2. **பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில்,** இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு, தொழில் முனைவோர், நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சுய உதவிக் குழு பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் போன்ற **திட்டங்கள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும்.**

3. 10 ஆண்டுகளுக்கு மேலான, 80 ஆதிதிராவிடர் நல விடுதிகள் மற்றும் 20 பழங்குடியினர் நல விடுதிகளில் கூடுதல் கழிவறைகள், குளியலறைகள், மின் சாதனங்கள் போன்ற **அடிப்படை வசதிகள் தலா 20 லட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

4. தற்போதுள்ள விலைவாசியினை கருத்தில் கொண்டு, **ஆதிதிராவிடர் குடும்பங்களில் ஏற்படும் இறப்பிற்கு ஈமச் சடங்கிற்காக வழங்கப்பட்டு வரும் நிதியுதவி, 2,500 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

5. ஆதிதிராவிட மக்கள் தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளை கொண்டாடும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய **24 சமுதாயக் கூடங்கள் 14.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழ் வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் எஞ்சிய 6 கிலோ மீட்டர் நீளத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசு 10 கோடி ரூபாய் நிதி வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**